[27th March 1969

Marriage Loan

* 236 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minster for Finance be pleased to state—

(a) whether the Government propose to advance long term loans to the Non-Gazetted Government Officers for celebration of the marriage of their children; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) இத் திட்டம் பற்றிய விவரங்கள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இந்த அரசு பதிவுபெறாத அரசு ஊழியர்களுக்கு அளிக்கிற சலுகை ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றிய முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை. திட்டம் பற்றிய விவரங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. 1—4—69 முதல் இது துவங்கும். அது பற்றிய விவரங்களை இப்போது அறிவிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

Collection of loans

* 237 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether the public of Thanjavur district gheraoed the officers who went for collecting the interest on loans and tax; and

(b) the action taken by the Government thereon?

கடன் வசூல்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன்—சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கடன், வரி பாக்கிக்குச் சென்ற அதிகாரிகளை பொதுமக்கள் “ கேரோ ” செய்தனரா ?

(இ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) 13—10—68 அன்று காவல் துறையினர் ஒரு வழக்கைப் பதிவு செய்துள்ளனர். நிகழ்ச்சி நடந்த அன்று 4 பேர் கைது செய்யப்பட்டனர். முக்கியக் குற்றவாளி நெடுநாட்களுக்குப் பிறகு பிடிக்கப்பட்டார். அறந்தாங்கி குற்ற விசாரணை உதவி நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் பிணையத்தின் பேரில் விடுவித்தார், புலன் ஆய்வு தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இந்த கேரோ செய்தவர்களில் எவர்களேனும் அரசியல் கட்சியில் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புலன் ஆய்வு பற்றிய விவரம் என்னிடம் இல்லை.